செய்தி வெளியீடு எண்–418 நாள்: 25.05.2010

# சென்னை மாநகராட்சி பணியாளர்களின் 168 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் மற்றும் 12 சுகாதார ஆய்வாளர்களுக்கு பணி ஆணைகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வழங்கினார்

* * * * * * * * *

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் இன்று (25.5.10) சென்னை மாநகராட்சியில் பணியில் இருந்தபொழுது உயிர்நீத்த 168 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கி, பணி சிறக்க வாழ்த்து தெரிவித்து, பாராட்டு கடிதங்களை வழங்கினார். அதில் 166 நபர்கள் துாய்மைப் பணியாளர்களாகவும், 2 நபர்கள் தட்டச்சர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் சுகாதார ஆய்வாளர்களாக 12 நபர்களுக்கும் என மொத்தம் 180 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் வழங்கி, வாழ்த்து தெரிவித்தார்.

## <u>கருணை அடிப்படையில் பணி நியமனம்</u>

கடந்த மூன்றரை வருடங்களில் சென்னை மாநகராட்சியில் 1043 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இன்று வழங்கப்பட்ட 168 வாரிசுதாரர்களின் பணி நியமன ஆணைகளும் சேர்த்து மொத்தம் 1216 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## <u>வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பணி நியமனம்</u>

மேலும், வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் 123 மருத்துவர்கள், 2 கால்நடை மருத்துவர்கள், 4 பல் மருத்துவர்கள், 30 உதவி பொறியாளர்கள், 23 மருந்தாளுநர்கள், 33 செவிலியர்கள், 110 சுகாதார ஆய்வாளர்கள், 51 பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள், 5 ஆய்வக தொழில்நுட்பநர்கள், ஒரு பிறப்பு, இறப்பு உதவியாளர், 20 பெண் ரண சிகிச்சையாளர்கள், 2 ஆண் ரண சிகிச்சையாளர்கள், 30 மகப்பேறு உதவியாளர்கள், 248 மலேரியா தொழிலாளிகள், 227 மின்சாரத் தொழிலாளிகள், 8

இளநிலை பயிற்சி அலுவலர்கள், 5 பூங்கா பணி பார்வையாளர் என மொத்தம் 922 நபர்கள் சென்னை மாநகராட்சியில் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

**பணி நிரந்தரம்**

மேலும் 2025 துாய்மைப் பணியாளர்கள், 51 மின்சாரத் தொழிலாளிகள், 107 தொழில்நுட்ப உதவியாளர்கள், 16 நேரக்காப்பாளர்கள், 13 நாய் பிடிப்பவர்கள், 102 மழலையர் பள்ளி ஆசிரியர்கள், 102 மழலையர் பள்ளி ஆயாக்கள், 30 மழலையர் பள்ளி அலுவலக உதவியாளர்கள் என மொத்தம் 2 ஆயிரத்து 446 பணியாளர்கள் பல்வேறு நிலைகளில் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

**பதவி உயர்வு**

அதே போன்று சென்னை மாநகராட்சியில் 1587 நபர்களுக்கு பல்வேறு நிலைகளில் பதவி உயர்வுகள் கடந்த மூன்றரை வருடங்களில் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மேயர் திரு.மா.சுப்பிரமணியன், தமிழக அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ராஜேஷ் லக்கானி, துணை மேயர் திருமதி.ஆர்.சத்தியபாமா, மன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு.ந.இராமலிங்கம், மன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு.சைதை ப.ரவி, நியமனக்குழு உறுப்பினர்கள் திரு.த.வி.முத்துக்கிருஷ்ணன், திரு.மு.வேலாயுதம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * * * * * **

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.